## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து ஆணைக் குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக் குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக் குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் ஆணைக்குழு இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழுவின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 : | | |
| (i) | நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் 2019 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் தேவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 129(ஈ)(ii) பந்தியின் பிரகாரம் நிதியல்லாத வெளிப்படுத்தலின் கீழ் வெளிப்படுத்த வேண்டிய நிதி ஆபத்துக்கள் மற்றும் நிதி ஆபத்து முகாமைத்துவம் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது ஆபத்துக்களை மதிப்பீடு செய்து வேறான ஒரு பகுதியாக உள்ளடக்குவதற்கும் கணக்கீட்டுக் கொள்கையை மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நியமத்தின் தேவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 : | | |
| (i) | நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதன் மூலம் உருவான தேறிய காசுப்பாய்ச்சல் மற்றும் மீள்கொள்வனவுகளின் போது உருவான தேறிய காசுப்பாய்ச்சல் காசுப்பாய்ச்சல் கூற்றில் தனித்தனியாக வெளிப்படுத்தப்படவில்லை. | நியம இலக்கம் 2(32) உப பிரிவின் கீழ் செயற்படு முறையில் காசுபாய்ச்சல் கூற்று தேறிய பெறுமதியில் சீராக்கப்பட்டு தயாரிக்கப்படுகின்றது. முதலீடு செய்வதன் மூலம் காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் காசு உட்பாய்ச்சல் தேறிய பெறுமதி (ரூபா 40,000,000) ஆக காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் தேவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது வரிக்கு முன்னரான இலாபத்தின் அடிப்படையில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சல் கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் வரிக்கு பின்னரான இலாபத்தின் அடிப்படையில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சல் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2019 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் தேவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 : | | |
| (i) | 90 பந்தியின் பிரகாரம் ஆதனங்கள் மற்றும் பொறிகள் உபகரணங்கள் பிரிவில் மீள்கணிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி வெளியிடப்பட்ட நிறுவனங்கள் மீள்கணிப்பீட்டு பெறுமதிக்குரிய வெளிப்படுத்தல்களைச் செய்ய வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நியமத்தின் தேவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 07 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீண்டும் பரீட்சித்து அதன் பிரகாரம் ஏற்படுகின்ற சீராக்கங்கள் பொதுத் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நியமத்தின் தேவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் படி செய்ய வேண்டிய போதிலும் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட ரூபா 36,332,454 தொகையான சொத்துக்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.5.2 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் சம்பளம் அங்கீகரிக்கப்பட்ட சம்பள படிமுறை மற்றும் தற்போது செலுத்தப்படுகின்ற உள்ளபடியான சம்பள அளவுகளுக்கிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. தேசிய சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவினாலும் வரிசை அமைச்சினாலும் சம்பள அதிகரிப்பு பரிந்துரை செய்யப்படாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருக்கும் போது 2012 ஆம் ஆண்டில் பதவி அணியின் திறைசேரி பிரதிநிதியினால் (Treasury Representative) விநியோகிக்கப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் அடிப்படைச் சம்பளத்தில் 25 சதவீத சம்பள அளவு அதிகரிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | காப்புறுதி ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு ஏனைய ஒழுங்குபடுத்ததல் ஆணைக்குழு மற்றும் அதே போன்று ஸ்தாபிக்கப்பட்ட சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் சம்பளம் மற்றும் வேதனங்கள் 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழிலை முறைமைப்படுத்தும் சட்டத்தின் மூலம் கிடைத்துள்ள அதிகாரங்களின் பிரகாரம் சம்பளம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சம்பளத்தை அதிகரிப்பபதற்கு முன் அதற்கான முறையான பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்திடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**1.5.3 தொங்கல் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | தொகை ரூபா | தொங்கலாக காணப்பட்ட காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| இலாப நட்ட தொங்கல் கணக்கு | ரூபா 31,150 தொகையான ஆரம்ப வரவு மீதி மற்றும் ரூபா 192,578,152 | கணக்குள் மென்பொருள் (DMS) மூலம் பெறப்பட்ட பரிட்சை மீதியில் (Trial Balance) இலா நட்ட தொங்கல் | காப்புறுதி ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு பயன்படுத்துகின்ற DMS மென்பொருளின் | சகல கணக்குகளும் தீர்க்கப்பட்டதன் பின்னர் அந்த மீதியை அடிப்படையகக் |

| | | | |
|---|---|---|---|
| தொகையான இறுதி வரவு மீதி | கணக்கொன்று (P&L Suspence Account) அவதானிக்கப்பட்டதுடன் அதில் ரூபா 31,150 தொகையான ஆரம்ப மீதியும், ரூபா 192,578,152 தொகையான இறுதி வரவு மீதியும் காணப்பட்டதன் காரணமாக கணக்கு வைத்தலின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வில் ஏற்றுக் கொள்ள முடியாதிருந்ததுடன் இந்த வழுக்களை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டிற்குரிய கணக்குகள் தீர்க்கப்படாமையின் காரணத்தினால் இலாப நட்டம் தொங்கல் கணக்கின் மீதியில் காணப்பட்டது. இறுதி கணக்கு தீர்க்கப்பட்டதன் பின்னர் அந்தக் கணக்கு பூச்சியப் பெறுமதியாக இருக்கின்றது. | கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371 | பெறப்பட்ட செயல்நிமித்த கட்டு நிதி அது வழங்கப்பட்ட பணிகள் நிறைவு பெற்றதும் உடனடியாக தீர்கப்பட வேண்டிய போதிலும் 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 554,497 தொகையான 03 முற்பணங்கள் 2019 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மூலதன செலவினங்கள் தொடர்பாக உரிய பணிகள் முழுமையாயக பூர்ததி செய்யப்பட்டதன் பின்னர் 2019 ஆம் ஆண்டின் போது மூலதனமாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது . | உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடி தேவையான பிரகாரம் துரிதமாக பணிகள் / சேவைகளைப் பெற்று முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 2003 யூன் 02 ஆந் திகதி PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் | 2019 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் திறைசேரி செயலாளரின் இணக்கப்பாடு கிடைக்கப் பெறாதிருந்த நிர்வாக கைநூலின் பிரகாரம் அந்த நானாவித | 2018.05.18 ஆம் திகதி நடைபெற்ற 182 ஆவது ஆணைக்குழுவின் போது நிர்வாக கைநூலிற்கு புறம்பாக அரசாங்க சுற்றறிக்கை பின்பற்றப்படும் போது | நிர்வாக கைநூல் முறையான பிரகாரம் அங்கீகரித்து நடவடிக்கை எடுத்து உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 9.14 ஆம் பந்தி | கொடுப்பனவுகயள் மேற்கொள்ளபட்டமை அவதானிக்கப்பட்டது. | நிறுவனத்தின் பணிகள் சரியாக நிறைவேற்றிச் செல்வதில் கஷ்டமாக இருந்தமை ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் தற்போது அங்கீகரிக்கப்பட்ட நிருவாகக் கைநூலைப் படுத்துவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | மாத்திரம் நானாவித கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iii) | 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை முறைமைப் படுத்தும் சட்டத்தின் 48(1) ஆம் பிரிவு. | ஆணைக்குழுவின் ஆயுட்காலப் பதவி தொடர்ச்சியாக வெற்றிடமாக காணப்பட்டமையின் காரணமாக காப்புறுதியாளர்களினால் வருடாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்ற ஆயுட்கால எண்ணிக்கை அறிக்கை 2016 ஆம் ஆண்டு முதல் இதுவரை மீளாய்வு செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆயுட்கால ஒருவர் காணப்படாமையின் காரணமாக இந்த நிலைமை தோன்றியிருந்தது. எனினும் 2019 ஆம் ஆண்டு முதல் நிதிப் பிரிவை நவீனமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தில் (FSMP) ஆயுட்கால ஒருவரைப் பெற்றுக் கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த பணிகளுக்காக ஆயுட்கால ஒருவரின் சேவையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 41,337,937 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 31,220,674 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 10,117,263 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு வருமானம் அதிகரித்துச் சென்றமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் அலுவலக நடவடிக்கைகள் புறம்பான நிறுவனமொன்றில் நடாத்தப்படுவதுடன் கட்டிடத்தின் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 38,533,202 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் | ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்கு பொருத்தமான சூழலொன்றை உள்ளடக்கிய இடமொன்று தற்போதைய கிரயத்தை விட குறைந்த தொகையில் கண்டுபிடிப்பதற்கு ஏற்பட்ட சகல முயற்சிகளும் வீணாகியிருந்தது. | பொருளாதார ரீதியில் குறைந்த செலவினங்களுடன் கட்டிட வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானதாகும். |

| | | |
|---|---|---|
| போது 13 சதவீத அதிகரிப்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் செலுத்தப்பட்ட கட்டிட வாடகை மொத்த செலவினம் மற்றும் மொத்த வருமானத்தின் சதவீதமாக முறையே 27 மற்றும் 21 ஆக இருந்தன. | எதிர்வரும் 05 வருடங்களுக்காகவும் அலுவலக கட்டிட வாடகையை கலந்துரையாடி இணக்கப்பாட்டிற்கு வந்திருந்ததுடன் ஆணைக்குழுவின் அங்கீகாரமும் பெறப்பட்டது. | |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் காப்புறுதி கம்பனிகளின் மாதாந்த அறிக்கை, காலாண்டு அறிக்கை மற்றும் வருடாந்த அறிக்கைகள் ஆணைக் குழுவிற்கு கிடைத்ததன் பின்னர் 02-03 மாதங்களுக்குள் மீளாய்வு செய்யயப்பட வேண்டும். எனினும், 04 நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகளை மீளாய்வு செய்யும் போது 38 நாட்கள் முதல் 84 நாட்கள் வரையான கால தாமதம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | சில தாமதங்களுக்கு காலப் பகுப்பாயள்வின் போது ஏற்பட்ட சில அவதானிப்புக்களில் விரிவாக பகுப்பாய்வை மேற்கொண்டு உறுதிப்படுத்துவதற்கு ஏற்பட்டிருந்தமை காரணமாக இருந்தது. மேலும் தாமதத்தை தவிர்ப்பதற்காக தொடர்ச்சியாக மீள் நினைவூட்டலைச் செய்வதற்கும் மீளாய்வவினை அவதானிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழு 2016 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் காப்புறுதி கம்பனிகளில் சட்ட விடயங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட இடர்களை அடிப்படையாகக் கொண்டு மூலதன அடிப்படையாகக் கொண்டு தொடர்புபடுத்தப்பட்டமையால் மேற்பார்வை முறையில் (RBC) ஈடுபடுத்தப்பட்ட ஆயுட்கால எண்ணிக்கை அலகில் ஏற்படுத்துவதற்கு 04 பதவிகள் 2016 திசெம்பர் அளவில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த பதவிகள் 2019 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டது. | தற்போது வெற்றிடமாக காணப்படுகின்ற ஆயுட்கால மற்றும் உதவி ஆயுட்கால பதவிகளுக்காக ஆணைக்குழுவின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற உலக வங்கி செயற்திட்டம் அமுல்படுத்துவதுடன் ஆட்சேர்ப்புக்களை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | ஆணைக்குழுவின் செயலாற்றலுக்கு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிமையால் பதவியணியினர் வெற்றிடங்கள் விரைவாக நிரப்பப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கணக்காண்டு முடிவடையும் திகதியில் கணக்குகள் தீர்க்கப்பட்டு கொடுக்கல் வாங்கல்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வு திகதியான 2019 மார்ச் 25 ஆம் திகதி வரையிலும் கணனி கணக்கு முறைமை தீர்க்கப்பட்டு கொடுக்கல் வாங்கல்களைப் பதிதல் பூர்த்தி செய்யப்படவில்லை. | காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு பயன்படுத்துகின்ற DMS மென்பொருளின் 2018 ஆம் ஆண்டிற்குரிய கணக்குகள் தீர்க்கப்படாமையினால் இலாப நட்டங்கள் தொங்கல் கணக்கில் மீதியொன்றாக காட்டப்பட்டது. இறுதி கணக்குகள் தீர்க்கப்பட்டதன் பின்னர் அந்தக் கணக்கு பூச்சியப் பெறுமதியாக இருக்கும். | கணக்காய்வுக்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரையிலும் சகல கணக்குகளும் தீர்த்து வைக்கப்பட வேண்டும். |
| (ii) | நிறுவனத்திற்கு கிடைத்துள்ள ரூபா 1,569,187 கூட்டுப்பெறுமதியான 02 நிலையான சொத்துக்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது ஆணைக்குழுவினால் கைப்பற்றப்பட்ட ரூபா 319,890 பெறுமதியான நிலையான சொத்துக்கள் என்பன மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்துக்கள் கைப்பற்றலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டில் செலவினமொன்றாக இருந்தமையால் அட்டுறு செலவினக் கணக்கு சரியாக பதியப்பட்டிருந்தது.<br><br>2019 ஆம் ஆண்டில் சொத்துக்கள் குறித்த நியமங்களுக்கு இணங்க இருக்கவேண்டியிருந்ததுடன் அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் அது சொத்தாக கணக்கீடு செய்யப்படுகின்றது.<br><br>உரிய நிதி ஏற்பாடு ஒதுக்குதல் மற்றும் கட்டளையிடுதல் 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டிற்குரிய அட்டுறு செலவினமாக பதியப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது உரிய சொத்துக்கள் நிறுவனத்திற்கு கிடைத்ததன் பின்னர் சொத்துக் கணக்கு சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது | நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் முறையான பிரகாரம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (iii) | வளிப்பதனாக்கி முறைமைக்காக செலுத்த வேண்டிய ரூபா 200,000 தொகையான ஆலோசனைக் கட்டணம் நடைமுறை வேலையாக | அந்த சொத்துக்கள் சரியான நிலையில் காணப்படுகின்றமை 2019 ஆம் ஆண்டின் போதே உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | செலவினங்கள் உரிய பிரகாரம் வகைப்படுத்தப்பட்டு காண்பிக்கப்பட |

| | | |
|---|---|---|
| கணக்கீடு செய்யப்படாமல் நடைமுறைச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அதன் பிரகாரம் அது உறுதிப்படுத்தியதன் பின்னர் உரிய சொத்துக்கள் 2019 ஆம் ஆண்டின் போது சொத்துக்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | வேண்டும். |

**4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டின் ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் தமது விடயப்பரப்பிற்கு கொண்டுவருகின்ற பணிகள் தொடர்பாக அமுல்படுத்தப்படுகின்ற முறை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்குரிய விடயப் பரப்பு தொடர்பாக நிதி அமைச்சின் ஆலோசனை எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |